DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC . No. 80 of 2018
LW-1 / PW - 1

| | |
|---|---|
| Name | ராவ்பகதூர் |
| Fathers / Husband name | ராவ் |
| Village | திருத்தணி |
| Age | 50 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை நேரம் 12.25

1. நான் தற்போது ஆரணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணி செய்து வருகின்றேன். 16.07.2018ம் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு வாகன தணிக்ககைக்காக நானும் நித்தியானந்தம், தலைமை காவலா் செல்வராஜ் ஆகியோா்கள் நாகலபுரம் கூட்டு ரோடு அருகே வாகன தணிக்கை செய்தபோது, ஆந்திராவிலிருந்து சென்னை நோக்கி வந்து லாரி எண் AP 26 8826 என்ற வாகனத்தை வாகனத்தணிக்கைக்காக நாங்கள் நிறுத்தினோம். ஆஜா் எதிரிகளை எனக்கு தெரியும். அந்த வாகனத்தில் சுமாா் 4 unit அளவுக்கு ஆற்று மணல் இருந்தது. அவா்கள் கொடுத்த இரசீது சரியாக இல்லாததால் நித்தியாணந்தம் SI அவா்களிடம் ஒப்படைத்தோம். எதிரி 1 ம் ஹரி என்பவா் தனாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் நானும், தலைமை காவலா் செல்வ ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையாப்பம் என்னுடையது தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளா் தயாா் செய்த மகஜரில் நானும், தலைமை காவலா் செல்வ ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் உள்ள முதல் கையாப்பம் என்னுடையது தான் அந்த மகசா் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2. அதன் பிறகு நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தாா். இது சம்பந்தமாக உதவி ஆய்வளாா் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தாா்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

3. காவல் நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்காக பகல் 12.00 மணிக்க புறப்பட்டு தராட்சி, பாலவாக்கம் சென்று மறுபடியும் ஊத்துக்கோட்டை நாகலபுரம் கூட்டுசாலையில் பகல் 12.10 மணிக்கு ரோந்து பணியில் ஈடுபட்டோம். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் நான் ஆற்றுமணல் என்பதை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நேரத்தில், மேற்படி சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

4. நாங்கள் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை தான் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது சொன்னேன் என்றால் சரிதான்.மேற்படி இரசீது மணலுக்கு உண்டானது இல்லை என்பதால் அதை உதவி ஆய்வாளிடம் கொடுத்து விட்டோம். ஆனால் உங்கள் விசாரணை மேற்படி விவரத்தை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. ஊத்துக்கோட்டையில் எம்.ஜி.ஆர் சிலை எங்கும் இல்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான்.எதிரியை கைது செய்த பின்னர் தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு மூலம் தயார் செய்யப்பட்டது. அதனை யார் தயார் செய்தார் என்றால எனக்கு ஞாபகம் இல்லை. அதில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

6. மேற்படி எதிரி எங்கிருந்து மணல் எடுத்துவந்தார் என்ற விவரத்தை விசாரணையில் சொல்லவிலலை என்றால் சரிதான். அதனை உதவி ஆய்வாளரும் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் நாகலபுரம் கூட்டுசாலையில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மகசர் படிவம் உதவி ஆய்வாளர் எடுத்து வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. பொதுமக்கள் யாரையும் உதவி ஆய்வாளர் விசாரணைக்கு அழைக்கவில்லை மற்றும் சாட்சியாக இருக்க வேண்டும் என்று அழைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் நாகலபுரத்தில் இருந்து ஊத்துக்கோட்டை வழியாக வரும்போது தணிக்கையில் ஈடுபட்டோம்.

8. ஆந்திரா அரசின் அனுமதியோடு இரசீது பெறப்பட்டு எடுத்துவந்த மணலை மேற்படி இரசீதை கிழித்து போட்டுவிட்டு புள்ளிவிவரத்திற்காக  உதவி ஆய்வாளர் அவர்கள் போட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி தினத்தில் எந்தவித வாகன தணிக்கையும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.50

DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC . No. 80 of 2018
LW-2 / PW - 2

| | |
|---|---|
| Name | செல்வராஜ் |
| Fathers / Husband name | தட்சினமூர்த்தி |
| Village | திருவள்ளூர் |
| Age | 58 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை நேரம் 12.50

1. நான் தற்போது ஆரணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளராக பணி செய்து வருகின்றேன். 16.07.2018ம் தேதி பகல் சுமார் 12.30 மணிக்கு வாகன தணிக்ககைக்காக நானும் உதவி ஆய்வாளர் நித்தியானந்தம், தலைமை காவலர் ராவ்பகதூர் ஆகியோர்கள் சத்தியவேடு ஜங்சன் அருகே வாகன தணிக்கை செய்தபோது, ஆந்திராவிலிருந்து சென்னை நோக்கி வந்து லாரி எண் AP 26 DT 8879 என்ற வாகனத்தை வாகனத்தணிக்கைக்காக நாங்கள் நிறுத்தினோம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அந்த வாகனத்தில் சுமார் 4 unit அளவுக்கு ஆற்று மணல் இருந்தது. அவர்கள் கொடுத்த இரசீது சரியாக இல்லாததால் நித்தியாணந்தம் SI அவர்களிடம் ஒப்படைத்தோம். ஆஜரில் உள்ள 1 ம் எதிரி ஹரி என்பவா வாகனத்தை ஓட்டி வந்தார்.1 ம் எதிரி ஹா தனாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் நானும், தலைமை காவலர் ராவ்பகதூர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையாப்பம் என்னுடையது தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் 12.45 முதல் 1.15 வரை பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்த மகஜரில் நானும், தலைமை காவலர் ராவ்பகதூர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் உள்ள இரண்டவாது கையாப்பம் என்னுடையது தான் அந்த ஏற்கவே மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. அதன் பிறகு நிலையம் வந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வளார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

3. காவல் நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்காக காலை 8 மணிக்க புறப்பட்டு சூளைமேணி, செங்கரை, மூக்கரம்பாக்கம் ஆகியஇடங்களுக்கு சென்றுவிட்டு சத்தியவேடு ஜங்சனில் பகல் 12.30 மணிக்கு ரோந்து பணியில் ஈடுபட்டோம். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் நான் ஆற்றுமணல் என்பதை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நேரத்தில், மேற்படி சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

4. நாங்கள் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை தான் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது சொன்னேன் என்றால் சரிதான்.மேற்படி இரசீது மணலுக்கு உண்டானது இல்லை என்பதால் அதை உதவி ஆய்வாளிடம் கொடுத்து விட்டோம். ஆனால் உங்கள் விசாரணை மேற்படி விவரத்தை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. ஊத்துக்கோட்டையில் எம்.ஜி.ஆர் சிலை எங்கும் இல்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் சம்வபஇடத்தில் வைத்து வாங்கப்பட்டது. எதிரியை கைது செய்த பின்னர் தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் உதவி ஆய்வளார் அவர்கள் கையால் எழுதினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

6. மேற்படி எதிரி எங்கிருந்து மணல் எடுத்துவந்தார் என்ற விவரத்தை விசாரணையில் சொல்லவிலலை என்றால் சரிதான். அதனை உதவி ஆய்வாளரும் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் சத்தியவேடு ஜங்சனில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மகசர் படிவம் உதவி ஆய்வாளர் எடுத்து வந்தாரா என்றால் எப்போதும் கையில் உதவி ஆய்வாளர் அவர்கள் வைத்திருப்பார்.

7. பொதுமக்கள் யாரையும் உதவி ஆய்வாளர் விசாரணைக்கு அழைக்கவில்லை மற்றும் சாட்சியாக இருக்க வேண்டும் என்று அழைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் சத்தியவேடுலிருந்து ஊத்துக்கோட்டை வழியாக வரும்போது தணிக்கையில் ஈடுபட்டோம்.

8. ஆந்திரா அரசின் அனுமதியோடு இரசீது பெறப்பட்டு எடுத்துவந்த மணலை மேற்படி இரசீதை கிழித்து போட்டுவிட்டு புள்ளிவிவரத்திற்காக உதவி ஆய்வாளர் அவர்கள் போட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி தினத்தில் எந்தவித வாகன தணிக்கையும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 01.15

DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC . No. 80 of 2018
LW-3 / PW - 3

| | |
|---|---|
| Name | நித்தியானந்தம் |
| Fathers / Husband name | துரைராஜ் |
| Village | காஞ்சிபுரம் |
| Age | 45 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை நேரம் 1.15

1. நான் தற்போது மாவட்ட குற்றப்பிரிவு காஞ்சிபுரத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகின்றேன். 16.07.2018 ம் தேதி நான் ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணியில் இருந்தபோது நானும், தலைமை காவலர் செல்வராஜ் மற்றும் ராவ்பகதூர் தலைமை காவலர் ஆகியோருடன் ஊத்துக்கோட்டை பஜரில் வாகனத்தை தணிக்கை செய்தபோது பகல் சுமார் 12.30 மணிக்கு சத்தியவேடு வழியாக வந்த லாரி AP 26 8879 என்ற வாகனத்தை தணிக்கை செய்தபோது லாரியின் ஓட்டுநர் முன்னுக்கு பின் முரணாக தகவல் கொடுத்தார். அதனால் நாங்கள் அந்த வாகனத்தை தணிக்கை செய்தோம். அந்த வாகத்தின் ஓட்டுநர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வாகனத்தில் ஆற்று மணல் 4 ருவைை இருந்தது. அந்த மணலுக்கு உண்டான அரசாங்க அனுமதியோ அல்லது இரசீதோ அவர்களிடம் இல்லை. அவர்களை கைது செய்தும், ஹரி என்பவர் கொடுத்த ஒப்பதல் வாக்குமூலத்தை நான் தயார் செய்தேன் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் செல்வராஜ் மற்றும் ராவ்பகதூர் இருவரும் கையொப்பம் செய்தார்கள். மேற்படி வாகனத்தை மகசரில் கைப்பற்றினேன். அதிலும் செல்வராஜ் மற்றும் ராவ்பகதூர் இருவரும் கையொப்பம் செய்தார்கள். வழக்கு சொத்துடன் எதிரியுடன் காவல் நிலையம்சென்று தணியறிக்கை தயார் செய்தேன். அந்த தணியறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.அதன் பிறகு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன்.

2. வாகனத்தை ஓட்டி வந்த ஹரி மற்றும் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் ரமேஸ் என்கின்ற தொப்பி ரமேஷ் மீது ஊத்துக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 331-2018 பிரிவு 379, 430 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகசரில் கையொப்பம் செய்த தலைமை காவலர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கைப்பற்றிய வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, மேற்படி வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து கனம் நீதிமன்றத்தில் குற்றயிறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

3. தணியறிக்கை யார் யாருக்கு கொடுப்பார்கள் என்றால் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும். மேற்படி தணியறிக்கை யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் நானே தயார் செய்து நானே வழக்கு பதிவு செய்து கொண்டேன். மேற்படி வழக்கில் நானே புகார்தாரர், நானே வழக்கை பதிவு செய்து, நானே முழுமையாக விசாரணை செய்து வழக்கை முடித்தேன் என்றால் சரிதான். சட்டத்தின் படி ஒரே வழக்கில் ஒருவரே புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரியாக இருக்க முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. காவல் நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்காக காலை 8 மணிக்க புறப்பட்டு சூளைமேணி, செங்கரை, மூக்கரம்பாக்கம் ஆகிய இடங்களுக்கு சென்றுவிட்டு சத்தியவேடு ஜங்சனில் பகல் 12.30 மணிக்கு ரோந்து பணியில் ஈடுபட்டோம். நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் நான் விசாரணைசெய்த சாட்சிகளின் வாக்குமூலத்திலும் ஆற்றுமணல் என்பதை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நேரத்தில், மேற்படி சாலையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் மற்றும் கடைகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான்.

4. நாங்கள் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்பதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரி மணலுக்கு உண்டான இரசீது ஏதுவும் கொடுக்கவில்லை. ஆனால் என்னிடம் இரசீது கொடுக்கப்பட்டது என்றால அது பொய்.

5. ஊத்துக்கோட்டையில் எம்.ஜி.ஆர் சிலை எங்கும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் சம்வபஇடத்தில் வைத்து வாங்கப்பட்டது. எதிரியை கைது செய்த பின்னர் தான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் உதவி ஆய்வளார் அவர்கள் ஆகிய என்னால் மடிக்கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அருகில் கடையில் வைத்து Print எடுக்கப்பட்டது. அதன் கடையின்

உரிமையாளரையோ அல்லது வேலை செய்யும் நபரையோ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி எதிரி எங்கிருந்து மணல் எடுத்துவந்தார் என்ற விவரத்தை விசாரணையில் சொல்லவிலலை என்றால் சரிதான். அதனை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி மணல் திருட்டு சம்பந்தமாக மணல் எங்கு எடுக்கப்பட்டது என்று நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நீர்வளம் பாதிக்கப்பட்டது என்று தெரிவிக்க எந்தவித ஆதாரமும் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். லாரி கைப்பற்றப்பட்ட போது அதில் மணல் இருந்ததற்கான போட்டோவோ அல்லது வீடியோவோ எடுத்து நீதிமன்றத்தல் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரிதான்.

7. தணிக்கை சம்பந்தமாக GD register நகல் ஏதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி மகசர் படிவம் எப்போதும் கையில் உதவி ஆய்வாளர் ஆகிய என் கையில் இருக்கும்.

8. பொதுமக்கள் யாரையும் விசாரணைக்கு அழைத்தும் அவர்கள் யாரும் முன்வரவில்லை மற்றும் சாட்சியாக இருக்கவும் முன்வரவில்லை. மேற்படி வாகனம் சத்தியவேடுலிருந்து ஊத்துக்கோட்டை வழியாக வரும்போது தணிக்கையில் ஈடுபட்டோம்.

9. எதிரி என்னிடம் எந்தவித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களும் தயார் செய்துவிட்டு, எதிரியின் மீது ஒரு பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஒரே நாளில் வழக்கு பதிவு செய்து, எதிரியை கைது செய்து , சாட்சியை விசாரணை செய்து, வாகனத்தை கைப்பற்றியது அனைத்தும் ஒரே நாளில் முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.ஆனால் நீதிமன்றத்திற்கு குற்ற இறுதியறிக்கை இரண்டு மாத காலதாமதமாக அனுப்பட்டது என்றால் உயர் அதிகாரிகளுக்கு சரிபார்த்து அனுப்புவதற்காக காலதாமதம் ஆகிவிட்டது.

10. ஆந்திரா அரசின் அனுமதியோடு இரசீது பெறப்பட்டு எடுத்துவந்த மணலை மேற்படி இரசீதை கிழித்து போட்டுவிட்டு புள்ளிவிவரத்திற்காக போட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி தினத்தில் எந்தவித வாகன தணிக்கையும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியம் முடிவுற்ற நேரம் 01.40